செ.வெ.எண்:125 நாள்: 27.02.2018

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சி மொழி கருத்தரங்கினை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு.இரா.வெங்கடேசன்,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார். முன்னாள் அமைச்சர் முனைவர் வைகைச்செல்வன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

----

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்வளர்ச்சித்துறையின் மூலம் ஆட்சி மொழி கருத்தரங்கம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (27.02.2018) நடைபெற்றது. ஆட்சிமொழி கருத்தரங்கை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு.இரா.வெங்கடேசன்,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார். முன்னாள் அமைச்சர் முனைவர் வைகைச்செல்வன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

கருத்தரங்கை தொடங்கிவைத்து தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் அவர்கள் பேசியதாவது:-

தாய்மொழியின் மீது அனைவருக்கும் ஒரு உந்துதல் இருக்கும். நான் பள்ளிபருவத்தில் தமிழ்மொழியில் தான் பயின்றேன் இங்கு பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தாம் தாமிழ்மொழியை ஆரம்பத்தில் அதிகமான தமிழ் திரைப்படங்களை பார்த்து கற்றுக்கொண்டதாக தெரிவித்தார். அழகான தமிழ் பேசிய அவரை பாராட்டுகிறேன். அனைத்து அலுவலகங்களிலும் தமிழ் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பேசும் போது ஆங்கிலம் கலந்து பேசிகின்றன தமிழ்மொழியிலேயே கற்க, பேச உக்கமும் ஆக்கமும் வேண்டும். தமிழ்மொழி இரண்டாயிரம், மூவாயிரம் ஆண்டுகள் தொன்மையான பழமையான மொழியாகும். இன்றலவும் வளர்ச்சி அடைந்து வரும் புழகத்தில் உள்ள மொழியாகும். தாய்மொழிக்கு அனைவரும் முக்கியதுவம் தர வேண்டும். அண்மையில் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் பேசும் போது இந்தியாவில் உள்ள இரண்டு பழமையான மொழிகளில் தமிழ்மொழி இனிமையானது, தொன்மையானது என தெரிவித்தார்கள். தமிழ்மொழியில் பேசுவது மிகுந்த சந்தோஷத்தை தரும். தமிழக அரசு தமிழ் வளர்ச்சி துறைக்கு அதிக திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ் வளர்ச்சி துறையின் வளர்ச்சியாக ஈடுபாட்டுடன் கோடிக்கனக்கான ரூபாய் மதிப்பீட்டில் பல திட்டங்களை செயல்படுத்தியுள்ளார்கள். 10 தமிழ் விருதுகளை 55 விருதுகளாக உயர்த்தி வழங்கியுள்ளார்கள். தமிழ்வளர்ச்சி துறையின் மூலம் மாணவர்கள் மற்றும் அலுவலர்களுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகிறது. ஆட்சிமொழி கருத்தரங்கம் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகிறது. தமிழ் ஆட்சிமொழியில் அலுவலர்கள் அனைத்து வீத கோப்புகளை பராமரிக்க வேண்டும்.

ஆட்சிமொழி சட்டம் குறித்து அனைத்து அலுவலர்களும் தெரிந்து கொள்ள வேண்டும். என பேசினார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் முனைவர் வைகைச்செல்வன் அவர்கள் பேசியதாவது:-

தமிழகத்தில் திருநெல்வேலி பேச்சு, மதுரை பேச்சு, சென்னை தமிழ் உட்பட பலவீதமான உச்சரிப்புடன் தமிழை பேசி வருகின்றனர். தமிழ்மொழி 3 ஆயிரம் ஆண்டுகள் பழமையான, செழுமையான மொழியாகும். சங்க இலக்கியத்தில் தமிழை கதிரவனுக்கு ஒப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. லத்தீன், கிரேக்கம், பாரசீகம், ரஷ்யம், சீனம், சமஸ்கிருதம், தமிழ் ஆகிய உலகில் ஏழு மொழிகள் தொன்மையான செம்மொழி அந்தஸ்து கொண்ட மொழிகளாகும். ஹார்டுவேர் பல்கலைகழகத்தில் 6 மொழிகளுக்கு இருக்கைகள் உள்ளது. தமிழ்மொழிக்கு இருக்கை இல்லை மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் இருக்கை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என சொன்னதன் அடிப்படையில் தமிழக அரசு ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்து இருக்கை அமைக்க நடவடிக்கை எடுத்ததன் அடிப்படையில் தற்போது இருக்கை அமைக்க தேவையான ரூ.40 கோடி நிதி திரட்டி வழங்கப்பட்டுள்ளது. நமது தொன்மையான மொகஞ்சதாரோ, சிந்துவெளி நாகரீகம் ஆகும். தமிழ்வளர்ச்சி துறைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு வளர்ச்சிகளை செய்துள்ளார்கள். தமிழ்மொழி பல்வேறு நிலைகளை கொண்ட செம்மொழியாகும். 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பான செம்மொழி என்பதை உணர்ந்து இனிமையான தமிழ்மொழியை அனைவரும் பயன்படுத்திட வேண்டும். தமிழை உண்மையுடன் நேசித்தால்தான் மொழி அறிவை பெறமுடியும் அரசு அலுவலகங்களில் பணியாற்றும் நீங்கள் அனைவரும் தமிழ்மொழியிலேயே அனைத்து கோப்புகளையும் கையால வேண்டும் என பேசினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

உலகில் தொன்மையான மொழி தமிழ்மொழி தமிழ் சிங்கபூர், மலேசியா, தென்னப்பரிக்கா, கனடா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் ஆட்சி மொழியாக உள்ளது. இந்திய ஆட்சி பணிக்கு தேர்வு செய்யப்படும் போது 30 சதவீதம் மட்டுமே சொந்த மாநிலத்தை சேர்ந்தவர்களாகவும் 70 சதவீதத்தினர் மற்ற மாநிலங்களை சேர்ந்தவர்களாகவும் இருப்பர்கள் நாம் பணியாற்றும் மாநிலத்தில் பேசப்படும் மொழியை தெரியாமல் வேலைபார்ப்பது கடினமானதாகும். நான் விருதுநகர் மாவட்டத்தில் உதவி ஆட்சியர் பயிற்சியாக சேர்ந்த போது தமிழ்மொழி தெரியாது தமிழ்மொழியை ஆர்வத்துடன் கற்றுக்கொண்டேன் மேலும் தினசரி குறுந்தகடு மூலம் தமிழ் சினிமாக்களை பார்த்து விரைந்து கற்றுக்கொண்டேன். தமிழ் தெரிந்ததால் தான் பொதுமக்களின் மனுக்களை படித்து சரியான பதில் சொல்ல முடிகிறது. மக்கள் பயன்பாட்டில் இல்லாத மொழிக்கு முக்கியதுவம் குறைந்து விடும். தமிழ்வளர்ச்சியை

ஊக்கப்படுத்த பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகிறது. அனைத்து அலுவலகங்களிலும் கோப்புகளை முழுமையாக தமிழ் பயன்படுத்திட வேண்டும். என பேசினார்.

முன்னதாக அரசு இசைப்பள்ளியின் மூலம் நாதஸ்வரம் இசைக்கப்பட்டது. குரல் இசை பாடல்கள் மற்றும பரத நாட்டியம் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., மண்டல தமிழ்வளர்ச்சித் துறை துணை இயக்குநர் முனைவர் பசும்பொன், கோட்டாட்சியர்கள் திருநெல்வேலி திருமதி.மைதிலி, தென்காசி திரு.ராஜேந்திரன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ஜெயஅருள்பதி, துணை முதல்வர் தூய சவேரியார் கல்லூரி முனைவர் மைக்கேல், பொதிகை தமிழ்சங்க தலைவர் கவிஞர் பேரா, மாவட்ட காப்பாட்சியர் திருமதி. சத்தியவள்ளி, உதவி இயக்குநர் தமிழ்வளர்ச்சித்துறை திருமதி.ரேஜினாள் மேரி உட்பட அரசு அலுவலர்கள், கவிஞர்கள், பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.